Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.497/2020

**Depositions of PW- 6**

| Name | திரு.ஆஞ்சே | Occupation | மெக்கானிக் வேலை |
|---|---|---|---|
| Father's name | சேவியர் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of February 2026.

05.02.2026

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். கடந்த 26.11.2019 அன்று நானும் தமிழரசன் என்பவரும் சர்ச் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் ஒருவரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நபர் யார் என்று எனக்கு நியாபகமில்லை. போலீசார் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அசாஆ.4 மற்றும் அத்தாட்சி–4 லிலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. **அத்தாட்சி–5 லிலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் போலீசார் விசாரணையின்போது 26.11.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் டு சிவகாசி ரோட்டிலுள்ள சர்ச் முன்பாக நானும் தமிழரசன் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் சந்தேகத்தின் அடிப்படையில் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தபோது அவர் முன்னுக்குப் பின் முரணாக சொன்னார் என்றும் எதிரியை எங்கள் முன்பாக கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும் எதிரி திருடிய பொருட்களை மகாலட்சுமி என்பவரிடம் கொடுத்த அடகு வைத்திருப்பதாகவும் எதிரியை அழைத்து சென்றால் அடையாளம் காட்டுவதாக சொன்னதன் பேரில் போலீசாருடன் நானும் தமிழரசனும் மற்றும் ஆஜர் எதிரி ஆகியோர்கள் சென்றபோது மகாலட்சுமியை அடையாளம் காட்டினார் என்றும் அவர் எடுத்து ஆஜர் செய்த 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம்–1, 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம்–1, 2 கிராம் தங்க மாட்டல் ஒரு ஜோடி, 2.300 கிராம் எடையுள்ள தங்க கம்மல் ஒரு ஜோடி ஆகிய பொருட்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.